01.07.2026



மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

அசல் வழக்கு எண்.**137/2017**

பி.வா.சா. **2-**சந்திரசேகரன், த/பெ.ரெங்கராஜுலு

சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்னுடைய தாத்தா வெங்கிடுசாமி நாயுடுவை பார்த்தது கிடையாது. நான் பிறப்பதற்கு முன்பே என் தாத்தா வெங்கிடுசாமி இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து என் தாத்தா வெங்கிடுசாமி நாயுடுவுக்கு பாத்தியப்பட்டது என்தற்கான பத்திரத்தை பார்த்துள்ளீர்களா என்றால் இல்லை. தாவா சொத்து வெங்கிடுசாமி நாயுடுவுக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் வெங்கிடுசாமி நாயுடுவுக்கு பாத்தியப்பட்டது தான் என்னிடம் சொல்லியுள்ளார். தாவா சொத்தை 01.07.1943ம் ஆண்டு வெங்கிடுசாமி மகன் என்னுடைய பெரியப்பா ராமசாமி நாயுடு கிரையத்திற்கு வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல, என்னுடைய தகப்பனார் என்னுடைய தாத்தா வெங்கிடுசாமி நாயுடு தான் கிரையம் வாங்கியுள்ளார் என்று என்னிடம் சொல்லியுள்ளார். தாவா சொத்து என் தாத்தா வெங்கிடுசாமி நாயுடு வாங்கிய சொத்து தான் என் தகப்பனார் சொன்னதற்கு பத்திரத்தை ஏதும் வாங்கி பார்த்தீர்களா என்றால் இல்லை. தாவா சொத்தை பொறுத்து வெங்கிடுசாமி

நாயுடு மகன் ராமசாமி நாயுடுவுக்கு என்பவருக்கு கோபால்பிள்ளை என்பவர் எழுதிக்கொடுத்த கிரையாவணம் தான் இது என கற்றறிந்த வாதி வழக்கறிஞர் கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகலை வாசித்தும் ஆவணத்தை காண்பித்து வினவிய போது சாட்சி இது தான் ஒப்புக்கொண்டார். அந்த ஆவணம் வா**.**சா**.**ஆ**.38** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(**கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞர் இது என்ன ஆவணம் என்று நீதிமன்றத்திற்கு விளக்காமல் திடீரென குறுக்கு விசாரணையில் ஆவணத்தை காண்பித்து வினவ இயலாது, அசல் ஆவணம் இல்லை மற்றும் வாதி வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார், பதிலாக கற்றறிந்த வாதி வழக்கறிஞர் தாவா சொத்து ஆரம்பத்தில் வெங்கிடுசாமி நாயுடுவுக்கு பாத்தியப்பட்டது என்று முதல் நிரூபண வாக்குமூலத்தில் கூறியிருப்பதால் அது தவறு என மெய்பிப்பதற்காக இவ்வாணத்தை பற்றி வினவியதாக பதில் தெரிவித்தார், ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) பற்றி வெங்கிடுசாமி நாயுடுவுக்கு மூன்று மகன்கள். முதல் மகன் ராமசாமி நாயுடு, அழகிரி சாமி, வெங்கடாசலம் ஆகியோர் ஆவார்கள். இதில் அழகிரிசாமி வாரிசு தான் வாதிகள் என்று சொன்னால் சரிதான். நான் பிறந்தது வளர்ந்தது எல்லாம் டால்மியாபுரம் நகரம் என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் வேலை பார்த்ததும் டால்மியாபுரம் தான், என் சகோதர சகோதரிகள் அனைவரும் பிறந்தது வளர்ந்து

டால்மியாபுரம் தான். தாவா சொத்தில் என் தகப்பனார் வெங்கிடுசாமி நாயுடு குடியிருந்தார் வந்தார் என்பதற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் குடியிருந்த வந்ததற்கு ஒரு சீட்டு தாக்கல் செய்துள்ளேன். ஆவணம் தாக்கல் செய்யவில்லை, தாவா சொத்திற்கு வந்து போய் வருகிறோம். பிரதிவாதி பானுமதி வாதிகள் வகையறாவிடம் தாவா சொத்தை கிரையம் கேட்ட விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

சரோஜா மற்றும் 2, 3 வாதிகளிடம் பிரதிவாதி பானுமதி தாவா சொத்தை கிரையம் கேட்டு அதை மறுத்துவிட்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு மேற்கு பானுமதிக்கு வீடு உள்ளது. தாவா சொத்திற்கு கிழக்கில் என்னுடைய நைனா அழகிரிக்கு சொத்து உள்ளது, அழகிரி சொத்திற்கு கிழக்கில் தனலெட்சுமிக்கு சொத்து உள்ளது. அந்த தனலெட்சுமி என்பவர் பிரதிவாதி பானுமதிக்கு மகள் ஆவார். தாவா சொத்திற்கு கிழக்கிலும், மேற்கிலும் பிரதிவாதிகள் பானுமதி மற்றும் அவருடைய மகள் தனலெட்சுமிக்கு இடம் உள்ளதாலும், இடையில் உள்ள தாவா சொத்து இருந்ததால் பிரதிவாதி வாதிகளிடம் தாவா சொத்தை கிரையம் கேட்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

01.07.2026



பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் இட்டு இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ள பாலச்சந்திரன் என்பவர் தாவா சொத்து கிரையம் சம்மந்தமாக என்னை அனுகினார் என்று சொன்னால் சரியல்ல, நான் தான் சாட்சி பாலச்சந்திரனிடம் அனுகி பேசினேன். இந்த பாலச்சந்திரன் எனக்கு பழக்கப்பட்டவர். பாலச்சந்திரன் மூலமாக கிரையம் பேசினோம். அந்த பாலச்சந்திரன் தான் தாவா சொத்தை கிரையம் பேச பிரதிவாதி பானுமதி என்னிடம் அழைத்து வந்தார். நீதிமன்றத்திற்கு பார்வையாளர் இடத்தில் அமர்ந்திருந்த அந்த பாலச்சந்திரன் ஆவார். நான்கு நபர்கள் ரெங்கராஜூலு நாயுடுவுக்கு வாரிசு ஆவார்கள். ரெங்கராஜூலு நாயுடுவுக்கு நான் மட்டும் ஒரே வாரிசு இல்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை எழுதிக்கொடுத்த நான் பக்கம் எண் 3 ல் காலச்சென்ற ரெங்கராஜூலு நாயுடுவுக்கு நான் மட்டுமே ஏகவாரிசு என எழுதிக்கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த வாசகம் தவறு என்று சொன்னால் சரிதான். என் அண்ணன் இறந்துவிட்டார், அக்கா இருவரும் திருமணம் ஆகி சென்றுவிட்டார்கள், எனக்கு எதுவுமே என் தகப்பனார் சொத்து எதுவும் ஆதரவு செய்யாததால் அப்படி எழுதினேன். இதுபோன்ற ஏகவாரிசு என்தற்கான விளக்கங்களை பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

என் தகப்பனாருக்கு டால்மியாபுரத்திலும் சொத்து உண்டு என்று சொன்னால் சரிதான். அந்த டால்மியாபுரத்தில் உள்ள சொத்தை என் சகோதரிகளுக்கு என் தகப்பனார் உயில் எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.11 ஆவணப்படி ஒரு சொத்தை திலகவதி என்ற சகோதரிக்கும், மற்றொரு சொத்தை பி.வா.சா.ஆ.12 ஆவணப்படி சாந்தி என்ற சகோதரிக்கும் என் தகப்பனார் உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய சகோதரிகளுக்கு பி.வா.சா.ஆ.11, பி.வா.சா.ஆ.12 ஆவணப்படி சொத்து எழுதிவைத்துவிட்டு, எனக்கு எந்த ஆவணமும் எழுதிவைக்காமல் விட்டுவிட்டதால், தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பது தான் என்னுடைய கட்சி என்று சொன்னால் சரிதான். கமலம் என்பவர் என்னுடைய மாமியார். பி.வா.சா.ஆ.12 ஆவணப்படி என் தகப்பனாருக்கு வேறொரு சொத்து இருந்து அது அடமானம் செய்திருந்தால் அந்த அடமான கடனை தீர்த்து வைத்துவிட்டு அந்த சொத்தை அடையுமாறு உயில் எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.12 ஆவணப்படி என் தகப்பனார் எனக்கு சொத்து கொடுத்துள்ளார், எனவே எனக்கு என் தகப்பனார் சொத்து ஆதரவு செய்யவில்லை என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல, ஏனென்றால் கடன் பத்திரத்திப்படி கடனை அடைக்க என்னால் முடியாது. எனக்கு சகோதர சகோதரிகள் இருக்கின்ற போது தாவா சொத்தை என்

தகப்பனார் எனக்கு உயில் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ பாத்தியப்படுத்தி ஆவணம் எதுவும் எழுதிவைத்துள்ளாரா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் என்னுடைய சகோதர சகோதரிகளுக்கு சொத்து ஆதரவு செய்துவிட்டதால், தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டதாக என் தகப்பனார் வாய்மொழியாக கூறியதை எழுதவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து நான் அடைந்துகொள்ள வேண்டியது என என் தகப்பனார் வாய்மொழியாக கூறியதும் ஆவணம் எழுதிவைக்கவில்லை, எனவே நான் சாட்சியம் அளிப்பது பொய் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து என் தகப்பனார் கொடுத்திருந்தால் ஆவணம் எழுதிவைத்திருப்பார், அல்லது என் சகோதரிகளுக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட உயிலிலாவது தாவா சொத்து எனக்கு கொடுத்து ஆவணத்தில் கூறியிருப்பார் என்று சொன்னால் என் தகப்பனார் சொன்னதால் நான் அப்படியே நம்பிவிட்டேன். பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில் கண்ட கடனை நான் அடைக்கவில்லை, தற்போது அந்த சொத்து கடன் அடைக்காததால் என் தகப்பனார் பெயரிலேயே உள்ளது. பி.வா.சா.ஆ.12 ஆவணப்படி கடனை நான் அடைத்தால் என் தகப்பனாரின் மற்ற வாரிசுகள் உரிமை கொண்டாடுவார்கள் என்பதால் தான் நான் கடனை அடைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில் உள்ள சொத்து காலிமனை. பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில் சொல்லப்பட்ட கடன் என் மாமனார்,

மாமியாரால் பெற்ற கடன் என்பதால் நான் அதை தீர்க்காமல் உள்ளேன் என்று சொன்னால் தவறு.

2016 ம் ஆண்டு நான் பாலச்சந்திரனை சந்தித்து தாவா சொத்தை விற்கும் படி கேட்டேன். தாவா சொத்து பிரிக்கப்படாத சொத்தாக உள்ளது, அதை பிரித்தால் தான் விற்பனை செய்யலாம் என கூறியதன் அடிப்படையில் தான் பி.வா.சா.ஆ.13 சட்ட அறிவிப்பு கொடுத்தேன் என்று சொன்னால் தவறு. பி.வா.சா.ஆ.13 சட்ட அறிவிப்பானது பாகம் கோரி அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருக்கும் காலம் வரை தாவா சொத்தை பாகம் பிரிவினை செய்துகொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு 1981 ம் ஆண்டு குடும்பத்தில் பாகம் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான்.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.